# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 16 செப்டம்ப




வெளியிடுவோர்


கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு. இந்தியா

☎04257-230030, 230382. Cell : 98427 - 30382

E-mail : kangayamcofc@eth.net




## ஆசானின் அறிவுரையிலே...


1. ஆசிரியர் உரை 1
2. எக்லீசியா வேதாகமக் கல்லூரி சேர்க்கை 9
3. பாவத்திலிருந்து மனந்திரும்புதல் 10
4. பெண்கள் பகுதி 14
5. கருத்தரங்க தலைப்புகளும், பேச்சாளர்களும் 16
6. வாலிபர் பகுதி 19
7. சிறுவர் பகுதி 22
8. பரிசுத்த ஆவியை ... 24
9. II தெசலோனிக்கேயர் ஒரு ....... 27
10. நாம் தேவனுடைய மகிமையைத்... 28

# THIRUMARAI AASAAN

*PUBLISHED BY CHURCH OF CHRIST*

**Editor** **S. Rajanayagam**

**Honorary Editor** **J.C. Choate**

**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India**

*Pleading for the restoration of pure New Testament Christianity*

Vol.16 September- 2003 Issue-9

ஆசிரியர் உரை

# பரம தரிசனம்

**நா**ம் ஓர் அறிவாளியைப் பார்த்து உங்களுடைய வாழ்க்கையின் முக்கியமான நாள் எதுவென்று கேட்டால், அவன் தன்னுடைய அறிவைக் கொண்டு சாதித்த ஏதாவது ஒரு நாளைக்குறித்துச் சொல்லுவான். அப்படியே ஒரு விஞ்ஞானியைக் கண்டு, உங்களுடைய வாழ்க்கையில் முக்கியமான நாள் எதுவென்று வினவினால், அவன் தன் ஞானத்தைக் கொண்டு, புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்த ஒரு நாளைக் குறித்துச் சொல்லுவான். இன்னும் ஒரு பெரிய வீரனைச் சந்தித்து, உங்களுடைய வாழ்க்கையின் முக்கியமான நாள் எதுவென்று விசாரித்தால், அவன் தான் உலகளவில் சாதனை செய்த ஏதாவது ஒரு நாளைக் குறித்துச் சொல்லுவான். இப்படியே நாம் ஒவ்வொருவராகக் கேட்டுக் கொண்டே போனால், அதற்கேற்ற பதில், விதவிதமாக நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

சரி, அறிவாளிக்கு அறிவாளியாகவும் (பிரசித்த பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேலின் பாதம் அமர்ந்து கல்வி கற்றுத் தேறியவன் அறிவாளிதானே!) ஞானிக்கு ஞானியாகவும், (உலக ஞானம் தேவனுக்கு முன்பாக ஒன்றுமில்லை என்ற உண்மையை வெளிப்படுத்தியவன் ஞானியில்லையா? வீரனுக்கு வீரனாகவும் (சாவு எனக்கு ஆதாயம் என்று தைரியமாய் உரைப்பவனை வீரன் என்று சொல்லுவது தவறா?) விளங்கும். அப்போஸ்தலன் பவுலைப் பார்த்து, ஐயா, பவுலடியாரே, உங்களுடைய வாழ்க்கையில் முக்கியமான நாள் எதுவென்று கேட்டால், அவர் எந்த நாளைக் குறிப்பிடுவார் என்று நினைக்கிறீர்கள்? கண்டிப்பாக, தான் ஒரு வெறியனாகத் தமஸ்கு செல்லும் வழியில், இரட்சகராகிய **இயேசுவால் சந்திக்கப்பட்ட அந்த நாளையே,** தன்னுடைய வாழ்க்கையின்

அதிமுக்கியமான நாள் என்று சந்தேகத்திற்கிடமில்லாமல் சத்தமாகச் சொல்லுவான். இதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை.

அந்நாளில், "அவன் பிரயாணமாய்ப் போய் தமஸ்கூவுக்குச் சமீபித்த போது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன், ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர், நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர், நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்" (அப். 9 : 3 – 6).

இந்த தரிசனத்தைக் குறித்தே, தான் ஒரு விசாரணைக் கைதியாக அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக நிற்கையில், கொஞ்சம் விளக்கமாக எடுத்துச் சொல்லிவிட்டு, அகிரிப்பா ராஜாவே "**நான் அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை**" என்று கூறுகிறார்.

தமஸ்கூவுக்குச் செல்லும் வழியில் அவர் கண்ட தரிசனம், அவர் மனதில் எப்பொழுதும் பசுமையாகவே இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இங்கே, பவுலடியார் அகிரிப்பாவிற்கு முன்பாக நிற்கும் போது, தான் அழிக்கத் தேடின விசுவாசத்திற்காக பல ஆண்டுகள் வெற்றிகரமாக ஊழியம் செய்து முடித்து விட்டார். மூன்று சுவிசேஷப் பிரயாணங்களை மேற்கொண்டு நாடுகள் பல சுற்றியும் வந்து, தன்னை அழைத்த கிறிஸ்துவுக்காக மிக அதிகமாகவே செய்து முடித்து விட்டார். ஆயினும், அந்தத் தரிசனத்தின் அனல் அவர் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. அதன் தாக்கம் மனதை விட்டு அகலவில்லை. வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் அதைக் குறித்துப் பேசிக் கொண்டேயிருக்கிறார். கிறிஸ்துவைக் குறித்தும், தான் எப்படிக் கிறிஸ்தவனாக மாறினேன் என்பது குறித்தும், அவருக்கு மிக உயர்ந்த எண்ணம் எப்பொழுதும் இருந்திருக்கிறதென்பதையே இது காட்டுகிறது. ஆகவே தான், அது குறித்துப் பெருமையாக எங்கு வேண்டுமானாலும், யாரிடத்தில் வேண்டுமானாலும் பேசிக் கொண்டேயிருந்திருக்கிறார்.

பொதுவாக தரிசனம் என்றாலே காட்சிதான். பவுலடியார், அகிரிப்பா ராஜாவிடம், தான் கண்ட தரிசனத்தைக் குறித்துச் சொல்லும் போது, அந்த தரிசனத்தில் என்ன காட்டப்பட்டது அல்லது தான் என்ன கண்டேன் என்பதற்கு முக்கியத்துவம் தராமல், தனக்கு என்ன சொல்லப்பட்டது என்பதற்கே அதிக முக்கியத்துவம் தந்துள்ளார். நன்றாகக் கவனித்தால்,

அப்பொழுது அவருக்குக் கிடைத்த தனிப்பட்ட அனுபவங்களைக் குறித்து வாயே திறக்காமல், இயேசுவுடன் நடந்த உரையாடலுக்கே- அவரின் வார்த்தைகளுக்கே அதிக முக்கியத்துவம் தந்துள்ளார். ஆம், தான் தரையில் விழுந்தது பற்றியோ, மற்றவர்கள் கைலாகு கொடுத்து அழைத்துச் சென்றது பற்றியோ, மூன்று நாள் புசியாமலும், குடியாமலும் இருந்தது பற்றியோ மனிதர் ஒன்றுமே பேசவில்லை. மாறாக, தான் யாரிடத்தில் பேசுகிறோம், அவருடைய ஆன்மீகத் தேவை என்ன? அவருடைய இரட்சிப்புக்கு எது அவசியம் என்பதைத் தெரிந்து கொண்டு அவைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துப் பேசியுள்ளார். இது இன்றைய தரிசனக்காரர்களின் செயலுக்கு நேர் விரோதமாக இருக்கிறது. நான் சொல்வது சரிதானே.

இன்றைக்கு நிலைமை எப்படியிருக்கிறது? அற்புதத்தின் காலமும், தரிசனத்தின் காலமும் முதல் நூற்றாண்டோடு முடிந்து போயிற்று. நிறைவானதான தேவனுடைய வாக்கியங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டபின், குறைவானவைகளாகிய இக்காரியங்கள் வெற்றிகரமாக முடிவுக்கு வந்துவிட்டது. (I கொரி 13 : 10) பங்கு பங்காகவும், வகை வகையாகவும் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நம்மோடு பேசிக் கொண்டிருக்கிறார் (எபி. 1 : 1, 2). மேலும் சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனும் அதின்படி செய்கிறவனுமே பாக்கியவான் என்று யாக்கோவு ஆசிரியர் கூறியுள்ளார் (யாக்.1 : 25) . அது மாத்திரமல்ல பிரயோஜனமான எல்லாவற்றையும் மறைக்காமல் வெளிப்படுத்தியிருக்கிறார் என அப்போஸ்தலரில் காண்கிறோம். (அப்.20:20) அத்தோடு, தன்னால் வெளிப்படுத்தினவைகளோடு ஒன்றையும் கூட்டவும் குறைக்கவும் கூடாது என்று எச்சரிக்கையும் கொடுத்துள்ளார் (வெளி 22 : 18) இவ்வளவு சரியாகவும், கறாராகவும் காரியங்களையும் செயல்படுத்தியுள்ள தேவன், இன்னும் ஏன் வெளிப்பாடுகளைக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்? சிந்தியுங்கள். மனிதர்களாகிய நம்மைப் போல, சொல்ல வேண்டியவைகளை சொல்ல வேண்டிய சமயத்தில் சொல்லாமல், குறிப்பு, பின் குறிப்பு என்று போடுகிறோமே அதைப்போல் அவரும் போட்டுக் கொண்டிருக்கிறாரா? நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா? அநந்த ஞானமுள்ள சர்வவல்ல தேவனைப்பற்றி ஒருவனால் எப்படி இவ்வளவு குறைவாக எண்ண முடிகிறது? எனக்கு விளங்கவில்லை; சொல்லுங்கள்.

உண்மை நிலையை, வேத வசனங்கள் இப்படி வெளிச்சம் போட்டுக் காட்டும் போது, அந்த உண்மைக்குச் செவிகொடுத்து அதை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், எரேமியா காலத்து பொய்த் தீர்க்கதரிசிகளைப்போல,

தீர்க்கதரிசனம் என்ற பெயரில் எதையெதையோ சொல்லித் திரிகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவனுக்கு விரோதி என்றே எரேமியா சொல்லுகிறார். வசனத்தைக் கவனியுங்கள். **"இதோ தங்கள் நாவின் சொற்களையே வழங்கி அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்"** (எரேமி. 23 : 31)

சரி, நாம் நம்முடைய பகுதிக்கு வருவோம். அகிரிப்பாவிடம் அப்போஸ்தலன் பவுல் **"... ராஜாவே நான் அந்தப் பரம தரிசனத்துக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை"** என்று கூறுகிறார். அதாவது, அந்தப் பரமதரிசனத்துக்கு நான் உடனடியாகக் கீழ்ப்படிந்தேன் என்று கூறுகிறார். யார் இந்த பவுல்? இவரைப் பற்றி வேத வசனங்கள் நமக்குச் சொல்லுவதென்ன?

பிலிப்பியர் 3 ஆம் அதிகாரத்தின் 6ஆம் வசனத்தைக் கவனித்தால், பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் தன்னைப் பற்றிச் சொல்லும் போது **"நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன்"** என்று கூறுகிறான். அதாவது மோசேயின் நியாயப் பிரமாணத்தின் காரியங்களை தான் அப்படியே கடைப்பிடிப்பவன் என்று கூறுகிறான். அப்படியானால் தனக்குக் கொடுக்கப்பட்டதில் தனக்கு போதிக்கப்பட்டதில் அவன் ஓர் உன்னத வாழ்க்கையை நடத்தியிருக்க வேண்டும், இருப்பினும் பவுல், "நான் அந்த பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படிந்தேன்" என்று சொல்லுகிறபடியால், அந்த தரிசனத்தில் அவன் எதையோ விசேஷமாக கண்டிருக்கிறான் என்பது நன்றாகவேத் தெரிகிறது. அந்த பரமதரிசனம் அவனுக்குச் சில உண்மைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறது என்றே தோன்றுகிறது. ஆகவே தான் அவைகளுக்குக் கீழ்ப்படிந்துள்ளான்.

ஆகையால், தேவனுடைய மகத்தான ஊழியனாகிய பவுல், அந்த தரிசனத்தின் மூலம் எதையெல்லாம் கண்டுகொண்டான் என்பதைத் தெரிந்து கொள்வது நமக்குப் பிரயோஜனமாயிருக்குமாதலால் அவை என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I. தன்னுடைய அறியாமையையும், தான் பாவியென்பதையையும் கண்டு கொண்டான் :

பவுலடியாரின் பரம தரிசனத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், மெத்தப் படித்த பவுல், மோசேயின் பிரமாணத்தின் படி நீதிமானாக வாழ்ந்த பவுல், தான் அறிய வேண்டியதை அறியாதவன் என்பதையும், பாவி என்பதையும் கண்டு கொண்டான் என்பது.

பொதுவாகவே படித்தவர்களுக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பு

உண்டு. மற்றவர்களுக்கும் அவர்கள் அறிவு பெருததவர்கள். ஆகவே அவர்கள் செய்வதெல்லாம் சரியாயிருக்கும் என்று எண்ணத் தோன்றும். **படித்தவர்களுக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பும் படித்தவர்கள் எப்பொழுதும் சரியாகவே செய்வார்கள் என்ற எண்ணமும் சரியாக இருக்குமானால், படிப்பாளியாகவும், நியாயப் பிரமாணத்தின்படி நீதிமானாகவும் வாழ்ந்த பவுல், பரம தரிசனத்துக்கு ஏன் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்?** தனக்குத் தெரிந்தது தான் சரி என்றும், தன்னுடைய பக்திதான் நீதியானது என்றும் சொல்லி பரம தரிசனத்தை அலட்சியம் செய்திருக்கலாமே! அவர் அப்படிச் செய்யாமல் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார் என்று நமக்குத் திட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், நமக்கு ஓர் உண்மை இங்கே பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. அது, தேவனுடைய திட்டத்தை சரியாகப் புரிந்து கொள்வதற்கு, உலக அறிவு போதுமானதாக இல்லையென்பது.

பின்னாளில் அறிவுமிகுந்த பவுல் தனது அறியாமையை எங்ஙனம் ஒத்துக் கொள்ளுகிறார் என்று பாருங்கள். “முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்டுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன். அப்படியிருந்தும் நான் **அறியாமல்** அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்” என்று கூறுகிறான் ( I தீமோ. 2: 13) இன்னும், தான் பாவியென்பதையும் அவர் எப்படி எடுத்துரைக்கிறார் பாருங்கள். “பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான்” என்று கூறுகிறார்.

ஆகையால் அருமையானவர்களே, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய ஞானத்தின்படி, எல்லாம் அறிந்தவர்களென்ற நினைப்பையும், நமக்குத் தெரிந்தவைகளின்படி நான் நீதிமான், பக்திமான் என்ற நினைப்பையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அப்போஸ்தலன் பவுல் போல், இயேசுவானவர் எனக்கு என்ன சொல்லியிருக்கிறார், என்னிடத்தில் இப்பொழுது என்ன எதிர்பார்க்கிறார், நான் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன என்று பார்த்து, அதின்படி செய்யத் தயாராக வேண்டும். எவ்விதத்திலும் குறைவற்றவனாக வாழ்ந்த பவுலடியாரே, தன் அறியாமையை உணர்ந்து, தான் பாவியென்பதை ஒத்துக் கொண்டு அவருக்குத் தன்னை உடனடியாக ஒப்புக் கொடுத்திருக்கும்போது, நாம் எவ்வளவு சீக்கிரம் அதைச் செய்ய வேண்டுமென்பதை எண்ணிப் பார்த்து செய்ய வேண்டியதை சீக்கிரம் செய்வோம்.

## II. தனக்குப் போதித்தவர்கள் தவறு என்பதைக் கண்டு கொண்டான்.

பவுலடியாரின் பரம தரிசனத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்கின்ற இரண்டாம் பாடம், அவன் தனக்குப் போதித்தவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு கொண்டான் என்பது.

கமாலியேல், அந்நாளில் புகழ்பெற்ற ஒரு நியாயசாஸ்திரி. இவன், மகாகீர்த்தி பெற்ற வேத சாஸ்திரியாகிய இல்லேல் என்பவனுடைய பேரன். தங்களுடைய ஞானத்திற்கு மூன்று தலைமுறையாகப் பெயர்பெற்ற குடும்பம் இவன் குடும்பம். இவன் பாதம் அமர்ந்து பாடம் கற்பது அந்நாளில் அவ்வளவு சுலபமாய் கிடைக்கும் ஒரு சிலாக்கியமல்ல. ஆனாலும் அந்த பாக்கியம் நம்முடைய பவுலுக்குக் கிடைத்தது. தனக்குக் கிடைத்த சிலாக்கியம் பற்றி பவுலடியாரே என்ன சொல்லுகிறார் என்று கவனியுங்கள். "**நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து முன்னோர்களுடைய வேத பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டேன் என்று**" (அப். 22 : 3).

புகழ்பெற்ற ஓர் ஆசானாலே, மிகத் திட்டமாகப் போதிக்கப்பட்ட பவுல், ஏன், அந்த பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படிந்தார்? என்ன காரணம்? சிந்தியுங்கள். தனக்குப் போதித்தவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதை அன்றைய தினம் அவன் கண்டு கொண்டான். ஆகவே தான் கீழ்ப்படிந்துள்ளான்.

ஆம், உபாகமம் 18 ஆம் அதிகாரம் வசனம் 15ல் "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" என்றும், இன்னும் 18, 19ஆம் வசனங்களில் "... என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன். **நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார், என் நாமத்தினாலே அவர் சொல்லும் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்**" என்ற போதனைகள் இந்தக் கெட்டிக்கார ஆசானாலே தனக்குக் கற்பிக்கப்படவில்லையே என்பதை அவன் அந்நாளில் கண்டு கொண்டான்.

இதை வாசிக்கும் அருமையானவர்களே, நாம் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் எவ்வளவு கவன்மாக இருக்க வேண்டுமென்பது புரிகிறதா? எங்க பாதர், எங்க ரெவரெண்ட், எங்க பாஸ்டர், எங்க பிரதர் நன்றாகப் பரிசங்கம் பண்ணுவார். எல்லா வசனங்களையும் அப்படியே எடுத்துச் சொல்வார் என்று சொல்லி, மனிதர்களுக்கு மாமரியாதை கொடுத்து

அவர்களுக்குப் பின்னால் செம்மறியாட்டுக் கூட்டங்கள் போல் அநேகர் சென்று கொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர், எங்களுக்குப் போதிக்க வேண்டிய அனைத்தும் போதிக்கப்பட்டிருக்கிறது, இனி எதுவும் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்று தலைக்கனத்தோடு சொல்லிக் கொள்கிறார்கள். தயவு செய்து இங்கே கவனியுங்கள். அறிவு பெருத்த கமாலியேலே, போதிக்க வேண்டியவைகளைப் போதிக்கத் தவறியிருக்கும் போது, நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றச் சாட்டப்படாதவன் என்று கொண்ட பவுலடியாரே, தான் கற்க வேண்டியவகைக் கற்றுக் கொள்ளாமல் இருந்திருக்கும் போது, **நமக்குப் போதிக்கிறவர்களின் தகுதியும், நம்முடைய நிலையும் எம்மாத்திரம்** என்று தயவு செய்து எண்ணிப் பாருங்கள்!

"இவருக்குச் செவிகொடுங்கள்" என்று (மத். 17 : 5) மறுரூப மலைக் காட்சியின் போது, மேகத்திலிருந்து வந்த சத்தம் சொல்லுகிறபடியால், நாம் எந்த ஒரு மனிதனுக்கும், மனிதர்களுடைய உபதேசங்களுக்கும் செவி கொடுக்காமல் இயேசுவால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு மாத்திரம் செவி கொடுத்து அதன்படி வாழ்வோம்.

## III. பாரம்பரியம் தகர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதைக் கண்டு கொண்டான்.

பவுலடியாரின் பரம தரிசனத்தின் மூலம் நமக்குக் கிடைக்கின்ற இன்னுமொரு பாடம். முன்னோர்களுடைய பாரம்பரியம் தகர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை அவன் அத்தரிசனத்தின் மூலம் கண்டு கொண்டான் என்பது.

அப்போஸ்தலன் பவுல், தான் இயேசுவால் சந்திக்கப்பட்டு மனமாற்றப்பட்டதைக் குறித்து, பின்னாளில் "புத்தியில்லாத கலாத்தியருக்குச்" சொல்லும் போது "அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்த போது, உடனே நான் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணாமல் அதற்குக் கீழ்ப்படிந்தேன்" என்று கூறுகிறார். (கலா.1:16) அதாவது, இதுதான் இரட்சிப்புக்கான தேவதிட்டம், இதுதான் கிறிஸ்துவின் உபதேசம் என்று சொல்லப்பட்டபோது, அவன் தனது முன்னோர்கள் பற்றியோ, பாரம்பரியம் பற்றியோ, தன்னுடைய முந்தின நிலையைப் பற்றியோ, தகுதியைப் பற்றியோ கவலைப்படாமல், தனக்கு போதிக்கப்பட்டவைகளுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்துள்ளான்.

பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் பவுலடியார், தனக்கு லாபமாயிருந்தவைகள் எவையென்று பெருமையோடு ஒரு பட்டியல் கொடுக்கிறார். அதில், தன்னை "**நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்**" என்று மார்தட்டிச் சொல்லுகிறார். இந்த பரிசேயர்கள் யார் என்பதற்கு

அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக உத்திரவு சொல்லும் போது, அதற்கு விளக்கமும் கொடுக்கிறார். **"நம்முடைய மார்க்கத்திலுள்ள சமய பேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயத்துக்கு இசைந்த பரிசேயன்"** என்று (அப். 26 : 5) மோசேயின் பிரமாணத்திலுள்ளவைகளை அட்சரம் பிசகாமல் கடைப்பிடிப்பவர்கள் தான் பரிசேயர்கள். அத்தோடு முன்னோர்களுடைய பாரம்பரியத்தைக் கடைப்பிடிப்பதிலும் மிகத் தீவிரமானவர்கள். இதினிமித்தம் நமதாண்டவர் இவர்களை அடிக்கடி கடுமையாகச் சாடியிருக்கிறார் (மத். 5 : 3, 9 மாற்கு 7 : 13) பாரம்பரியம் என்பது "முன்னோர்களிடமிருந்து தலைமை தலைமுறையாகப் பெறப்படும் நடைமுறைக் கோட்பாடுகள்". **அவை, தேவ வெளிப்பாட்டினால் பெறப்படுபவை அல்ல.** அவைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வேத போதனை எதுவுமில்லை. மிகவும் முக்கியம். அவைகளுக்கு மோசேயின் பிராமாணத்துக்கு இணையான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மதிக்கப்பட்டது. மோசேயின் பிரமாணம் **"வரிவேதம்"** என்றும், வாய்வழியாகப் பெறப்பட்ட பாரம்பரியங்கள் **"ஒலிவேதம்"** என்றும் அவர்களால் அழைக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட பலமான பாரம்பரியத்தை மீறுவது ஒரு பரிசேயனுக்கு இலேசான காரியமல்ல. ஆயினும், இயேசுவானவர் அவனுக்கு வெளிப்படுத்திச் சொன்ன காரியங்களினிமித்தமாக எந்தத் தாமதமும் செய்யாமல் பாரம்பரியங்களைத் தகர்த்தெறிந்து, ஊழியக்காரனாகிய அனனியாவின் ஆலோசனைப்படி பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். (அப். 22 : 16) இப்படிச் செய்ய வேண்டுமென்பதை பவுல் அந்த பரம தரிசனத்தில் கண்டு கொண்டான்.

அருமையான தேவப் பிள்ளையே, பரிசுத்த வேதாகமத்துக்குச் சம்பந்தமில்லாத பாரம்பரியக் காரியங்களைக் கடைப்பிடிப்பதில் நம்முடைய நிலை எப்படியிருக்கிறது? பாரம்பரியத்தைக் கடைப்பிடிப்பது தவறு என்றும், அது தகர்க்கப்பட வேண்டிய ஒன்று என்றும், பவுல் அந்த தரிசனத்தின் போதும், அதைத் தொடர்ந்து சொல்லப்பட்ட வார்த்தைகளின் மூலமும் கண்டு கொண்டது உங்களுக்கு விளங்குகிறதா? அப்படியானால் நாம் ஏன் இன்னும் உடும்புப் பிடியாய்ப் பிடித்து, தேவ கட்டளையை அவமதிக்க வேண்டும்? அதனடிப்படியில், நரகத்திற்கும் பாத்திரராக மாற வேண்டும்? சிந்தியுங்கள். பாரம்பரியம் மட்டுமல்ல, தேவனுக்கு விரோதமான காரியங்கள் எதுவாக இருந்தாலும் அவைகளுக்கு ஒரு முடிவு கட்டுவோம். அப்போஸ்தலன் பவுல் இயேசுவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தது போல, நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் உபதேசங்களுக்குக் கீழ்ப்படிவோம். பவுல் பரம தரிசனத்தின் மூலம் கண்டு கொண்டவைகளை நாமும் நம்முடைய வாழ்வில் கண்டு, பவுலைப் போல் பரம கானானுக்குப் பங்காளியாக மாறுவோம். ஆமென்.

**செ. இராஜநாயகம்.**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

***P.O. Box - 27, Kangayam - 638 701. India.***

**STUDENTS ADMISSION NOTIFICATION**

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் செல்வதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **காலம்** | : | **3 வருடம்** (செமஸ்டர் முறை) |
| **Duration** | : | **3 Years (Semester System)** |
| **கல்வித் தகுதி** | : | **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு** |
| **Qualification** | : | **+2 Pass (or) Any Degree** |
| **பட்டம்** | : | **வேதயியலில் இளங்கலை பட்டம்** |
| **Degree** | : | **B.B.S. (Bachelor of Biblical Studies)** |

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இயக்குநர்

**எக்லீசியா வேதாகமக் கல்லூரி,**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா

✆ : (04257) 230030,

Cell : 98427 - 30382.

# பாவத்திலிருந்து மனந்திரும்புதல்

சுவிசேஷத்தின் மற்றொரு கட்டளை மனந்திரும்புதலாகும். மனந்திரும்புதல் என்றால் என்ன? இயேசுக் கிறிஸ்துவின் மரணம் , அடக்கம் உயிர்த்தெழுதலோடு இது எவ்வாறு சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது? முதலாவது கேள்விக்கு இப்பொழுது விடை காண்போம். மனந்திரும்புதல் என்றால் நாம் விட்டுப் பிரிந்த ஒருவரிடமோ அல்லது ஒன்றிடமோ மீண்டும் திரும்புவதாகும், தவறானவைகளையும், மோசமானவைகளையும் செய்வதை நிறுத்துவதாகும். நாம் எதைக் குறித்து பேசுகிறோம் என்பதை கவனிக்க இயேசு சொன்ன உவமையைக் காண்போம். ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். மூத்தவனிடத்தில் அவன் வந்து; மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில், வேலை செய் என்றான். அதற்கு அவன் மாட்டேன் என்றான். ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து அப்படியே சொன்னான். அதற்கு அவன் போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார். அதற்கு அவர்கள் மூத்தவன் தான என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி, ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை. ஆயக்காரரும், வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள். அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை என்றார். (மத். 21 : 28-32).

இரண்டாவது கேள்விக்கு நாம் விடை காண்போமானால், இயேசுகிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் என்பதோடு மனந்திரும்புதல் எந்த விதத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறதென்றால், ஒரு மனிதன் தன் பாவத்தை விட்டு திரும்பும் போது, அது நமது ஆண்டவரின் மரணத்திற்கு அடையாளமாக இருக்கிறது. ஆகவே தான், மனந்திரும்புதல் மிகவும் முக்கியமாக இருக்கிறது.

மனிதன் பாவியாக இருக்கிறான் (ரோமர் 3 : 23) பாவத்தின் சம்பளமோ மரணமாயிருக்கிறது (ரோம.6:23) ஆகவே தான் கிறிஸ்து நீங்கள் மனந்திரும்பாவிட்டால் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்றார் (லூக். 13 :

3) வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் நம் ஆத்துமாவை அழித்துவிடும் காரியத்திலிருந்து திரும்பாவிட்டால் நாம் நித்தியத்தை இழந்து போகிறவர்களாய் நிற்போம். மீண்டும் இயேசு சொல்கையில், அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்கிறேன் என்றார். (லூக்.15 : 7).

மனந்திரும்புதல் என்பது பாவத்திற்காக வருத்தப்படுவது மாத்திரமல்ல, அதைவிட மேலானது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதன் தான் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டதற்காகவும் கண்டுபிடிக்கப்பட்டதினால் சிறைச்சாலையில் இருப்பதற்காய் வருத்தப்படுகிறவனாக இருக்கலாம். இப்படிப்பட்டவன் தான் செய்த குற்றத்திற்காக வருத்தப்படாமல் அதன் விளைவை தான் சந்திக்க நேர்ந்ததால் வருத்தப்படுகிறான். இது உண்மையான மனந்திரும்புதல் ஆகாது. அப்போஸ்தலன் பவுல் கூறுகையில் தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது (II கொரி. 7 : 10) என்கிறார். தேவனுக்கேற்ற துக்கமே மனந்திரும்புதல் என நினைத்து விடக்கூடாது.

மனந்திரும்ப வேண்டியது யார்? மார்ஸ்மேடை பிரசங்கத்தின் இறுதியில், அப்போஸ்தலனாகிய பவுல் **“அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார் : இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்”** (அப். 17 : 30) என்கிறார். ஆகவே, இதன்படி நாம் பார்த்தால், கர்த்தர் எங்குமுள்ளோர் யாவரும் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் என்று விரும்புகிறார் எனத் தெரிகிறது. இங்கு ஒரு உண்மையை கவனிக்க வேண்டும். அறியாமை உள்ள காலங்களை தேவன் காணாதவர் போல ஒரு காலத்தில் இருந்தார். ஆனாலும் இப்பொழுது நாம் பாவத்தை அறியாமையில் செய்து கொண்டிருந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதை, மிகத் தெளிவாகக் கூறிவிட்டார். மீண்டும், அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகையில் **“தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி ; கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.”** என்றார் (2 பேது 3 : 9).

எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று சொல்லும் வேதாகமம், மனந்திரும்ப வேண்டியவர்கள் யார் என்று அடையாளப்படுத்துகையில், அவர்கள் வயது வந்த பெரியவர்கள் என்றோ பாவம் செய்தவர்கள் என்றோ தான் சொல்லுகிறது. “பரலோகராஜ்யம்

இப்படிப்பட்டவர்களுடையது" என்று சொல்லப்பட்டிருப்பதால் குழந்தைகளோ, சிறுபிள்ளைகளோ, இதில் இடம் பெற வாய்ப்பில்லை. மாறாக, சுவிசேஷம் மனந்திரும்பக் கூடிய அளவுக்கு வயது உடையவர்கள் தங்கள் பொல்லாத கிரியைகளை விட்டுத் திரும்ப நினைப்போரிடமும் தான் சொல்லப்பட வேண்டும். தங்கள் கிரியைகளுக்கு கணக்குக் கொடுக்கக்கூடிய வயது வந்தவர்கள் தான் மனந்திரும்ப முடியும்.

அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்திற்கு நாம் சென்று பார்த்தால், அங்கு அப்போஸ்தலன் பேதுரு பெந்தெகொஸ்தே நாளிலே ஜனங்களுக்கு பிரசங்கித்துக்கொண்டிருந்தார். கிறிஸ்துவை சிலுவையில் அறைவதில் பங்கு கொண்ட பாவத்தைச் செய்தவர்களிடம் அப்போஸ்தலர் பிரசங்கித்தார். அவர்கள் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட பொழுது "பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்". (அப் 2 : 38) என்று சொன்னான். அதற்குப் பின் மற்றொரு பிரசங்கத்தில், அவர் சொல்லும் போது "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்" (அப்.3 : 19 என்கிறார்.

இந்த வசனப்பகுதியிலிருந்து மனந்திருமபுதல் என்பது சுவிசேஷத்தின் கட்டளை என்பது தெளிவாகத் தெரிகிறது. கர்த்தருக்கு கீழ்படிவதின் மூலம் பாவ மன்னிப்பை பெற விரும்பும் யாவரும் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பியே ஆக வேண்டும். வேறு வார்த்தையில் சொல்வதென்றால் ஒருவர் மனந்திரும்புதல் இல்லாமல் இரட்சிக்கப்படவும் முடியாது, பரலோகம் போகவும் முடியாது. இரட்சிப்பை பெற்றுக் கொள்வதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்று கர்த்தர் சொல்லி இருக்கிறாரோ அந்த இடத்தை வேறு எதுவாலும் நிரம்பிவிட முடியாது.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் உள்ள மற்ற மனமாற்ற சம்பவத்தை நாம் வாசித்தால், அதில் மனந்திரும்புதல் நேரிடையாக கட்டளையிடப்படவில்லை என்றாலும், அது நிகழ்ந்ததற்கான அடையாளங்கள் தெரிவதை நாம் காண முடியும். உதாரணமாக, அப்போஸ்தலர் 14ஆம் அதிகாரத்தை எடுத்துக் கொண்டால், பவுலும், சீலாவும் பிலிப்பிய சிறை அதிகாரிக்குக் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தபின், அவன்அவர்களின் காயங்களை கழுவினான். இது மனந்திரும்புதல் இல்லை என்றால் வேறென்ன? அப்போஸ்தலர் 9ஆம் அதிகாரத்தின்படியான சவுலின் சம்பவத்தில், அவன் கிறிஸ்தவர்களை துன்பப்படுத்துகிறவனாக இருந்தாலும், கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகிய

பின், முற்றிலும் வேறு நபராக மாறிவிட்டான். அவன் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்ததோடல்லாமல் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை ஒரு காலத்தில் அதிகமாக எதிர்த்தாலும் அவரை பிரசங்கிக்கவும் தொடங்கினான். இது மனந்திரும்புதல் இல்லையா?

ஒருவர் சொல்லும் போது, சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் போது விசுவாசத்தால் மாற்றம் வருகிறதென்றும், மனந்திரும்புவதால் வாழ்க்கையில் மாற்றம் நிகழ்கிறதென்றும், நாம் ஞானஸ்நானம் எடுக்கும் போது நமது வாழ்வின் நிலை, ஆவிக்குரிய மரணத்திலிருந்து ஆவிக்குரிய ஜீவன் என்ற நிலைக்கு வருகிறது என்றும் கூறியுள்ளார். ஒருவன் மனந்திரும்பி, கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியும் போது, தன் கடந்த கால பாவங்களிலிருந்து முற்றும் மன்னிக்கப்படுகிறான். அவன் புதிய சிருஷ்டியாக மாறுகிறான் (II கொரி. 5 : 17). கிறிஸ்துவுக்குள் புதிய மனிதனாக மாறுகிறான் (கலாத்தியர். 3 : 26, 2 - 7). ஒரு காலத்தில் அவன் செய்த ஒன்றையும், இப்பொழுது அவன் செய்வதில்லை. ஒரு சமயத்தில் எதிர்த்த எல்லா காரியங்களுக்காகவும், இப்பொழுது காரியம் ஆற்றுகிறான். இதற்கு ஒப்பானது இந்த உலகில் வேறு ஒன்றும் இல்லை.

ஒருவன் கிறிஸ்தவனாக மாறிய பின்னும், ஒரு வேளை மனந்திரும்பும் சந்தர்ப்பம் வரக்கூடும். கிறிஸ்தவன் என்றாலே அவன் பூரணமானவன் என்று பொருள் அல்ல. பக்தியுள்ள கிறிஸ்தவன் கூட தவறு செய்ய வாய்ப்புண்டு. அப்படிப் பாவம் செய்யும்போது தன் குற்றத்தை அறிக்கையிட்டு தேவனிடத்தில் மன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டும் (யாக். 5 ; 16; அப். 8 : 22). அப்படிச் செய்யவில்லை என்றால் அவர்கள் அழிந்து போவார்கள்.

ஆனால், கிறிஸ்தவர்களாக இல்லாதவர்கள், சபையிலே அங்கம் வகித்தவர்களாக கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டு, பாவத்திற்காக மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும். இதில் ஒவ்வொரு கட்டளையும் முக்கியமானது. ஒருவன், மற்றவைகள் இல்லாமலே இவைகள் ஒன்றை மாத்திரம் செய்துவிட்டு இரட்சிப்படைய முடியாது. அது மாத்திரமல்ல, ஒருவன் எல்லாவற்றையும் செய்தாலும், ஒன்றை விட்டு விட்டாலும் இரட்சிக்கப்படமுடியாது. மனந்திரும்புதல் என்றால், ஒருவன் தன்னிடத்தில் உள்ள எல்லா தவறுகளையும், பாவங்களையும், அது மார்க்க சம்பந்தமாக இருந்தாலும், தான் கீழ்ப்படிதலுள்ளனாக வாழும்படி அவைகளை விட்டு விட வேண்டும். அப்படி ஒருவன் செய்யும் போது தான் மனந்திரும்புதலின் கட்டளைக்கு ஒருவன் கீழ்ப்படிந்திருக்கிறான் என்று பொருள். நீங்கள் தேவனுடைய இந்த கட்டளைக்குக் கீழ்ப்படிந்து விட்டீர்களா?

J.C. சோட்.

J.C. CHOATE.

# தாய்மார்களே, உங்கள் பிள்ளைகளுக்கு போதித்து பயிற்சியளியுங்கள்

அதி வேகமானதும், பரபரப்பானதுமான இவ்வுலகில், அநேக காரியங்களை நாம் செய்ய வேண்டியது இருந்தாலும், அக்காரியங்களை செய்வதற்கு குறைவான நேரமே உடையவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பரிதாபகரமாக, நமது பிள்ளைகள் நாம் கொடுக்க வேண்டிய முக்கியத்துவப்பட்டியலில் கடைசியாக இடம் பெறுகிறார்கள்.

பெற்றோர்கள் செய்யும் கடமைகளுக்கான அணுகுமுறையில், மக்கள் வெவ்வேறு கருத்துடையவர்களாக பிரிந்திருக்கிறார்கள். அவைகளில் மூன்றை நாம் இப்பொழுது கவனிப்போம்.

- **முதலாவதாக,** நாம் பார்க்கும்பொழுது சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளும் பிள்ளைகளும் மிகவும் சிறிய வயதில் இருக்கின்றனர், அவர்களுக்கு உணவு கொடுத்து, உடை கொடுத்து வளர்ப்பதே போதும் மற்ற காரியங்கள் எல்லாம் அவர்கள் வளர்ந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிவிடுகின்றனர். பிள்ளைகள் வாலிபப் பருவம் அடைந்தவுடன் அவர்கள் என்ன நினைக்கிறார்கள், அவர்களை துன்பப்படுத்தும் பிரச்சினை என்ன, அவர்களுடைய விருப்பு, வெறுப்பு ஆகியவைகள் மீது கவனம் செலுத்திக் கொள்ளலாம் என்றும் நினைக்கிறார்கள்.

சிறுவர்கள் "அற்பமானவர்கள்" அல்ல. வாலிபத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் இருக்கிறவர்கள் தான் இச்சிறார்கள். அவர்களை பற்றிய அனைத்து காரியங்களும் முக்கியமானதே, அதுவும் இந்த ஆரம்ப கால வருடங்களில் அவைகள் இன்னும் முக்கியமானதாக இருக்கிறது! "நான் ஒரு வாலிபனை வளர்கிறேன், நான் அவளுக்கோ / அவனுக்கோ போதிக்கும் காரியங்கள், அவர்கள் வயது வந்து பக்குவமடையும் காலத்தில் வாழ்க்கையை எப்படி அணுகுவாள் / அணுகுவான் என்பதை தீர்மானிக்கும்" என்பதை நாம் மனதில் கொண்டால், பிள்ளை வளர்க்கும் விதம் மிகச் சிறப்பானதாக அமைந்துவிடும்.

முதல் 5 வயது என்பது மனதளவிலும், உணர்விலும் வளரும் பருவமாகும். எவ்வளவுக்கதிகம் நாம் நேரத்தை செலவு செய்து கற்றுக் கொடுத்து, அவர்களோடு பழகி, போதிக்கிறோமோ அவ்வளவுக்கதிகமாக அவர்கள் பக்குவமடைய முடியும். பரிசுத்த வேதாகமம் இதைப்பற்றிப் பேசும்போது, "நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும், உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாக கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள்

வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்து கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக. (உபாகமம் 11:19,20) என்று சொல்லுகிறது. உணவு தயாரிக்கும் வேளையானாலும், பயண நேரமானாலும், ... துணிகளை மடித்து வைக்கும் நாழிகையானாலும் சரி, தேவனுடைய வார்த்தையில் நமது பிள்ளைகளை கட்டிவிக்க, இத்தருணங்களை நாம் தவறவிடக் கூடாது என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

- ❑ **இரண்டாவதாக, பிள்ளை வளர்ப்பு பற்றிய பெற்றோர்கள், கொண்டிருக்கும் தவறான, கருத்து என்னவென்றால், "அளவுக்கதிகமான காரியங்களை அவன்மேல் சுமத்த வேண்டாம். குழந்தைப் பருவத்தை அவன் சந்தோஷமாக அனுபவிக்கட்டும். இன்னும் கொஞ்ச காலத்தில், அவன் வளர்ந்து, தொடர்ந்து பொறுப்புகளை சுமக்க வேண்டியதிருக்கிறது" என்பார்கள். இதன் விளைவு அதிக பிரச்சினையை நமக்குக் கொண்டு வரும்.**

நிச்சயமாக, ஒரு குழந்தை பெரியவர்களுக்காக பொறுப்பை ஏற்று நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் இளம் வயதில் சற்றும் பொறுப்பற்று தன் இஷ்டப்படி செய்ய அனுமதிக்கவும் கூடாது. ஏனென்றால் திடீர் என்று ஒரு நாள் எல்லாம் முடிந்து விடும். வீட்டை விட்டு வெளியே சென்று, கல்லூரி படிப்பை முடிப்பான், வேலையைப் பெற்றுக் கொள்வான், பிறகு தன் சொந்தக் குடும்பத்தை நடத்த ஆரம்பித்து விடுவான். அவன் இளம் பருவத்தில் எந்த ஒரு பயிற்சியும், ஒழுக்கமும் இல்லாமல் வளர்ந்துவிட்டு குடும்பம் நடத்த ஆரம்பித்தவுடன், கப்பலில் இருந்து, கடலில் குதித்தவன், திடீர் என்று தன்னைக் காத்துக் கொள்ள உதவும் காற்றினால் நிரப்பப்பட்ட உடையை தொலைத்தவன் போல், எதைச் செய்ய வேண்டும், எவ்வாறு செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரியாமல் தவிப்பான். தன் பொறுப்பை தட்டிக் கழிக்க ஆரம்பித்து விடுவான். கடைசியில் குடும்பத்தையும் வெறுக்க நேரிடும்.

- ❑ **மூன்றாவதாக,** இன்னும் ஒரு வகையான பெற்றோர் பிள்ளைகள் உறவைப் பற்றி பார்ப்போம். தனக்கு முன்பாக ஒரு நல்ல முன்மாதிரி இருக்குமானால் அதைப் பார்க்கும் குழந்தை தானும் அதைப் போலவே தன்னை வளர்த்துக் கொள்ளும். ஞானமுள்ள, பொறுமையுள்ள மற்றும் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு தெளிவுள்ள பெற்றோர் இந்த வகையில் தங்கள் மக்களை வளர்ப்பார்கள்.

"பிள்ளையாளரின் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" என்று ஞானி சாலமோன் கூறுகிறார் (நீதி : 22:6)

பெண் பிள்ளைகள், சிறுவயதாய் இருக்கும்போதே அவர்கள் கற்றுத்தரப்படவேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் எதிர்காலத்தில் மனைவிகளாக, தாய்மார்களாக, வீட்டை உருவாக்குகிறவர்களாக

## 2-10-2003 வியாழக்கிழமை

| | கருத்தாளர்கள் | கருத்துக்கள் |
|---|---|---|
| 1. | **சகோ. J. பிக்கின்ஸ்**<br>Bro.J. Pickens | **"ஒன்றை மாத்திரம் உங்களிடம் அறிய விரும்புகிறேன்"** (கலா.3 : 2)<br>"This only I want to learn from you" (Gal.3 :2) |
| 2. | **சகோ. பாஸ்கர்**<br>Bro.Basker | **"நீங்கள் ... இருதயங்களைக் கிழித்து"** (யோவேல்.2 : 3)<br>"Rend your Hearts...garments" (Joel.2:13) |
| 3. | **சகோ.சார்லி டி பால்மா**<br>Bro.Charlie Di Palma | **"இந்த புதிய உபதேசம் எப்படிப்பட்டது?"** (மாற்கு. 1 : 27)<br>"... What new doctrine is this" (Mark.1 : 27) |
| 4. | **சகோ.பிலிப் பாஸ்கர்**<br>Bro.Philip Basker | **"... உங்களிலிருக்கிறவர் பெரியவர்"** (I யோவா. 4: 4)<br>"He who is in you is greater" (I John.4 :4) |
| 5. | **சகோ. E.K. நத்தானியேல்**<br>Bro.E.K. Nathaniel | **"நாங்கள் ஒரே ஆவி... நடந்தோமல்லவா?"** (II கொரி.12 : 18)<br>"Did we not walk... same steps?" (II Cor. 12 : 18) |
| 6. | **சகோ. ஹென்றிமோகன்**<br>Bro. Hendry Mohan | **"... பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது"** (பிலி. 1 : 29)<br>"But also to suffer for his sake" (Phil.1 : 29) |
| 7. | **சகோ. பால்ராஜ்**<br>Bro. Paulraj | **"... ஆகிலும் இது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல"** (ரோம.10 : 2)<br>".... But not according to knowledge" (Rom. 10 : 2) |

## கருத்தரங்கில் வெளியிடப்படும் நூல்கள்

1. திருமறையில் பெண்கள் (150 பக்கங்கள்)  2. கிறிஸ்தவ பக்திவிருத்திப் பாடல்கள் (250 பாடல்கள்)

## 3-10-2003 வெள்ளிக்கிழமை

| | | |
|---|---|---|
| 8. | சகோ. ஜார்ஜ் சாலமோன்<br>Bro. George Solomon | "அவர்... உதவி செய்ய வல்லவராக இருக்கிறார்" (எபி. 2 : 18)<br>"He is able to aid those who are tempted" (Heb. 2 : 18) |
| 9. | சகோ. EZS. ஏசையன்<br>Bro. EZS. Yesaian | "ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு" (வெளி. 2 : 20)<br>"Nevertheless I have a few things against you" (Rev. 2 : 20) |
| 10. | சகோ. சார்லி டி பால்மா<br>Bro. Charlie Di Palma | "விழிப்பாயிருந்து அதை காத்துக் கொள்ளுங்கள்" (எஸ்றா. 8 : 29)<br>"Watch and keep them" (Ezra. 8 : 29) |
| 11. | சகோ. S. ராஜநாயகம்<br>Bro. S. Rajanayagam | "... பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (II யோவா. 8)<br>"But that we may receive a full reward" (II John. 8) |
| 12. | சகோ. டேவிட் சிதம்பரம்<br>Bro. David Chidambaram | "நம்முடைய தேவன்... யுத்தம் பண்ணுவார்" (நெகே. 4 : 20)<br>"Our God will fight for us" (Neh. 4 : 20) |
| 13. | சகோ. S. ஏசையன்<br>Bro. S.Yesaian | "ஆதியிலே செய்த கிரியைகளை செய்வாயாக" (வெளி. 2 : 5)<br>".... Do the first works} (Rev. 2 : 5) |
| 14. | சகோ. K.M. பிலிப்<br>Bro. K.M. Philp | "... அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அப்படியே செய்வார்" (I தெச. 5 : 24)<br>"He who calls you is faithful, who also will do it" (I Thess.5 : 24) |

மாறப்போகிறார்கள். எந்த ஒருபிள்ளை சிறுவயதில் தன் வயதிற்கு கீழ் இருக்கும் பிள்ளைகளை குழந்தைகளை போல் பாதுகாத்து கவனித்துக் கொள்கிறார்களோ அந்தப் பிள்ளை ஒரு பலமான தாய்மைத்துவ உணர்வை பெற்றுக் கொள்கிறாள். இதே உண்மைதான் சமையல் செய்தல், வீட்டை சுத்தம் செய்தல், மேசை நாற்காலிகளை சுத்தம் செய்தல், பாத்திரங்களை கழுவுதல் போன்ற காரியங்கள் பெண் பிள்ளைகளின் வாழ்வில் அமைகிறது.

சிறுபையன்கள் தங்கள் வீட்டில் இருக்கும் காரை கழுவி சுத்தம் செய்தல், அதை பாதுகாத்தல், வீட்டை சுற்றிலும் நடக்கிற காரியங்களில் கவனமாய் இருத்தல், தோட்டத்தை சீராக வைத்தல், புல்களை அழகாக வரிசைப்படுத்துதல், போன்ற ஆண்களின் வேலைகளை செய்து பழக வேண்டும். ஒரு வேளை அவன் தனித்து அந்த வேலைகளை செய்ய முடியாவிட்டால் தகப்பன் அதை அறிந்து அவனோடு கூட வேலை செய்து அவனை ஒரு பொறுப்புள்ளவனாக வளர்க்க வேண்டும். பிள்ளைகள் நம்மைக் கேட்பதின் மூலமா? அல்லது நம்மைப் பார்ப்பதின் மூலமா? எப்படிக் கற்றுக் கொள்கிறார்கள்.

ஒவவொருநாளும் நம் பிள்ளைகள் எப்படி நடக்க வேண்டும், காரியங்களை எப்படிச் செய்ய வேண்டும் என்று நலம் தவறாமல் அவர்களுக்கு போதித்து சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

அதைவிட முக்கியமாக நாம் வாழ்ந்து காட்டுவது முக்கியம், நாம் பல வார்த்தைகளை மணிக்கணக்காக பேசிக் கொண்டேயிருக்கிறோம். ஆனால் நாம் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இயற்கையாலே நாம் பேச்சைவிட நம் வாழ்வுதான் அவர்களை பல மடங்கு கற்றுக் கொள்ள உதவி செய்யும்.

இதுதான் உண்மையும் கூட. எப்போது பார்த்தாலும் தன் கணவனும் வாக்குவாதம் பண்ணிக் கொண்டு, குடும்பத்தில் தன் பேச்சுதான் எப்பொழுதும் எடுபட வேண்டும் என்று நினைத்து வாழும் ஒரு பெண், தன் பிள்ளை எதிர்காலத்தில் ஒரு கீழ்ப்படிதலுள்ள மனைவியாகவும், பிறரை மதிக்கின்ற ஒரு மனைவியாகவும், திகழ வேண்டும் என்று எதிர்பார்க்கவே முடியாது. அதேபோல் எப்போதும் தன் மனைவியை கடிந்து கொண்டும், அடக்கியும் வைத்திருக்கும் ஓர் ஆண் தன் மகனுக்கு மனைவியில் அன்பு கூற வேண்டும், அதாவது கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்ததுபோல அன்பு கூற வேண்டும் என்ற உண்மையை உணர வைக்க முடியாது. வாழ்க்கை எப்படி வாழ வேண்டும் என்ற பேருண்மைகளை நம்மைப் பார்த்துத்தான் நம் பிள்ளைகள் கற்றுக் கொள்ளப்போவதால் நாம் சிறந்த முன் மாதிரிகளாக இருப்பதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். பெண்களாகிய நாம் அப்படி இருக்கும்படி தேவன் தாமே உதவி செய்வாராக!.

**B.B. CHOATE** **R.R. NAYAGAM**

# எங்கே ஓடுகிறாய் ?

ஆதியிலே ஆதரையோர் கால அளவை அளந்திடல் வேண்டும் என்பதற்காக தேவன் ஆதவனை தன் சுற்றுப்பாதையிலே சுழன்றோரும்படி செய்தார். வாழ்வில் உயர வேண்டும் என்று எண்ணுகிற மானுடத்திலிருந்து மாறுபட்டு நதியின் தண்ணீர் கடலில் கலக்க வேண்டுமென்று கீழ்நோக்கிப்பாய்ந்தோடுகிறது. ஆற்றின் நீர் ஆழியிலே கலப்பது போல, மனிதன் தன் உடலை மண்ணோடு கலந்துவிடும் வரை ஓயாது ஓடும் இந்த வாழ்க்கையின் வாலிப பருவத்தில் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் எனக்கருமையான வாலிப உள்ளங்களுக்கு, மனிதனின் உடல் மண்ணோடு கலந்து முடிந்தாலும் அவனை ஒருநாள் உயிர்ப்பித்து, விண்ணுக்கு கொண்டு போகும்படியாகத்தான் நான் இம்மண்ணுக்கு வந்தேன் என்ற விடியலின் செய்தியை எடுத்துச் சொன்ன விடிவெள்ளியாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

செல்வச்செழிப்பின் சிகரத்தையும், தனிமையின் அதலபாளத்தையும் தன் வாழ்வில் அனுபவித்த யோபு தன் ஜீவிய நாட்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் "என் நாட்கள் அஞ்சற்காரர் ஓட்டத்திலும் தீவிரமாயிருக்கிறது" (யோபு 9 : 25) என்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் தன் ஊழியப் பாதையில் எருசலேமிற்கு போக வேண்டாம், அங்கு கட்டுகள் இருக்கிறது என்று எச்சரிக்கப்பட்ட போது, தன் வாழ்வைக் குறித்து என்ன கூறுகிறார் பாருங்கள், "என் பிராணனையும் அருமைய எண்ணேன் என் ஓட்டத்தை சந்தோஷத்தோட முடிக்கவும் ..." (அப். 20 : 24) என்கிறார். அப்படிச் சொன்ன அப்போஸ்தலன் தன் வாழ்நாளின் இறுதியில் " . . . ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் (II.தீமோ. 4 : 7) என்கிறார். வாலிபர்களே, வாழ்க்கை ஒரு ஓட்டம் என்று தேவனுடைய மனிதர்கள் சொல்லியருக்கிறபடியால், அந்த ஓட்டத்தில் நாம் ஒழுங்காய் ஓட வேண்டும் என்பதற்காக இம்மாதம் இம்முயற்சி செய்கிறேன், கண்டு நன்று ஓடிடுக.

## உயிர் தப்ப ஓடினவன்

பாவத்தில் என்னென்ன வகையும், விதமும் இருக்கிறதோ, அவ்வனைத்திலும் மிகுந்து காணப்பட்ட பட்டணம்தான் சோதோம், கொமாரா. அதன் அக்கிரமம் வானளாவியதாக இருந்தது. பொறுமையின் சிகரமான நமது தேவன் அதை அழிக்கத் தீர்மானித்து, அக்கினியையும், கந்தகத்தையும் வானத்திலிருந்து அனுப்பினார். தான் வசித்த பட்டணத்தில் நடந்த இழிவான காரியங்களை கண்ட லோத்து, நாள்தோறும் தன் இருதயத்தில் வாதிக்கப்பட்டான், அப்படிப்பட்ட நீதிமானை

விடுவிக்கும்படியாக தேவன் அவனை அபபட்டணத்திலிருந்து வெளியே கொண்டு வந்து, அவனிடம் "அவர் உன் ஜீவன் தப்ப ஓடிப்போ பின்னிட்டுப் பாராதே.. நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்". (ஆதி 19 : 17)

சுற்றிலும் கேடு நடந்து கொண்டிருந்த போதிலும் தன்னைக் கறைப்படுத்தாதிருந்த லோத்து ஆண்டவருக்குப் பிரதியுத்திரமாய் என்ன சொன்னான் என்று கவனியுங்கள், "அப்படியல்ல ஆண்டவரே... மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது இதோ அந்த ஊர் இருக்கிறதே... அது கிட்ட இருக்கிறது சின்னதுமாயிருக்கிறது என் பிராணன் பிழைக்க நான் அங்கே ஓடிப்போகட்டும் ..." என்கிறான். முதலாவது, நாம் லோத்துவினுடைய பதிலைப் பார்த்தால் அவனை தேவன் என்ன செய்யச் சொன்னாரோ அதை செய்ய மாட்டேன் என்று மறுப்பதை நாம் கவனிக்கிறோம்.

நீதியுள்ள தேவன், பட்டணம் முழுவதையும் அழித்தாலும் நீதிமான் ஒருவன் மாண்டு போகக் கூடாது என்ற எண்ணம் கொண்டு, "ஜீவன் தப்ப மலைக்கு ஓடிப்போ" என்றார். ஆனால் இந்த நீதிமானோ, "என்னாலே முடியாது" என்கிறான். அது மாத்திரமல்ல! இப்பட்டணம் "கிட்ட இருக்கிறது" "சின்னதாக இருக்கிறது" நான் அங்கே ஓடிப்போகிறேன் என்று, **தேவ திட்டத்திற்கு, மாற்றாக தன் சுய சிந்தனையாகிய விளை நிலத்தில் விளைந்த சத்தில்லாத சாவி போன்ற யோசனையை விளம்பி அதைச் செய்கிறேன் என்கிறான்.**

வாலிபர்களே! இன்றும் நம்மில் அநேகர், தேவன் தனது விவிலியத்தில் விளக்கமாகவும், எளிமையாகவும் ஜீவனுக்கும் தேவபக்திக்கும் தேவையான அனைத்தையும் கொடுத்திருந்தாலும், நாங்கள் அதன்படி நடக்கமாட்டோம், **இன்று உலகம் வெகுவாக மாறிவிட்டது. வேதாகமம், வரலாற்றுச் சுவடிதானே ஒழிய நாம் வாழ்க்கையை அதன் அடிப்படையில் அமைத்துக் கொள்ள வேண்டிய புனிதநூல் அல்ல என்கிறார்கள்.** ஜீவன் தப்ப ஓடுங்கள் என்றும், மலைக்கு ஓடுங்கள் என்றும் தேவன் சொல்லியிருந்தும், **கன்மலையாகிய கிறிஸ்து சொன்ன ஜீவனுள்ள கட்டளையை ஏற்க மறுப்போர், நிச்சயம் நரகத்திற்கு நேராகத்தான் ஓடுகிறார்கள்.** வாலிபனே, நாமும் அவர்களோடு ஓடாமல், விசுவாசத்தை தொடக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய கிறிஸ்துவை நோக்கி பொறுமையோடு ஓடுவோமாக.

## பாவத்தை விட்டு ஓடினவன்

சகோதர சதியால், சூது மதியால், விற்கப்பட்ட சாப்நாத்பன்னேயா என்று எகிப்திய முடியால் பெயர்பெற்ற யோசேப்பு, தான் போத்திபார் என்ற அதிபதியின் வீட்டில் இருந்த போது அவனின் மனைவியின் மூலம் வந்த மாம்ச இச்சைக்குரிய சோதனையிலிருந்து விலகி தன் கச்சையின் ஆடையை விட்டோடினான். அப்படி ஓடிக்கொண்டிருக்கையில் ஒரு வேளை அவனிடம் யாராவது ஒருவன், "நீ எங்கே இப்படி ஓடுகிறாய்?"

என்று கேட்டிருந்தால் அவன் என்ன சொல்லியிருக்க வாய்ப்பிருக்கிறது. **“நான் பாவத்திலிருந்து பரிசுத்தத்திற்கு ஓடுகிறேன்”** (ஆதி. 39 : 9) என்று சொல்லி இருப்பான்.

வாலிபம் என்கிற இந்த வசீகரமான பருவத்தில், பாவம் நம்மை கவின் கொண்டு கவர்ந்திழுக்கும் என்பது திண்ணம். பாவம் நமக்கு சந்தோஷத்தை தருவதைப் போல பாசாங்கு செய்யும், ஐயோ எத்தனை சுகம் என்பது போல தோன்றும், ஆனால் அதின் முடிவை நாம் அனுபவிக்கையில் **“ஐயோ பாவம் இவன்”** என்று மற்றவர் நம்மை பார்த்து பரிதபிக்கும் பரிதப நிலைதான் நமக்கு மிஞ்சும் என்பதுறுதி. எத்தனை வாலிபர்கள் பாக்கு சுகத்திற்காக நாக்கில் புற்றுநோயுடன் இன்று அவதிப்படுகிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வேண்டாம் அன்பர்களே! வேண்டாம் இந்த விபரீதம், ஆசை காட்டி நம்மை அலங்கோலப்படுத்தும் அலங்காரமான அவலட்சணங்கள் **வேண்டவே வேண்டாம். பரமன் நம்மை பரிசுத்தற்காக அழைத்திருக்கிறார்.** அந்த பரம அழைப்பை நோக்கி யோசேப்பு ஓடியதைப் போல ஓடுவோம்.

வாலிபர்களே, இன்றைக்கு எல்லாம் நல்லதுதான், நம்முடைய நினைப்புகள் தான் ஒன்றை சரி என்றும் தவறு என்றும் சொல்லுகிறது நாம் ஒன்றை செய்துபார்த்து அது நமக்கு ஒத்துவராவிட்டால் பின்பு அதை விட்டுவிடலாம் என்று அன்று சொல்லி, அதற்கு ஆதரவாக “களவும் கற்று மற” என்ற பழமொழியை கூறுகிற அநேகரை நாம் காணமுடியும், இது மனிதனின் கூற்று, ஆனால் சர்வஞானம் கொண்ட தேவன் சொல்லுகையில் **“பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றைவும் விட்டு விலகுங்கள்”** (1 தொச. 5 : 22) என்கிறார். இங்கே, நாம் கவனிக்க வேண்டிய ஒன்று யாதெனில், “பொல்லாங்காய்த் தோன்றுகிற” என்கிற சொற்றொடரைத் தான். பொல்லாங்கை விட்டு விலகுங்கள் என்று மாத்திரம் சொல்லாமல், அத்தோடு, “தோன்றுகிற” என்கிற பதமும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, **நாம் ஒன்றை பார்த்தாலே ஒரு வேளை இது தீமையை விளைவிக்குமோ என்ற எண்ணம் வந்தால் அதை விட்டு விலக்கிடல் வேண்டும்.**

எனக்கன்பான ! வாலிபர்களே உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எங்கே ஓடுகிறீர்கள், பாவம் என்ற தண்ணீரற்ற படுகுழியில் விழும்படி ஆவலாக ஓடுகிறீர்களா? அல்லது பரிசுத்தத்தை நோக்கி பக்குவமாக ஓடுகிறீர்களா? என்பதை சீர்தூக்கிப்பாருங்கள்! உங்களுக்காக தன் ஜீவனையே கொடுத்த இயேசு ஆண்டவர் உங்களை அழைக்கிறார். அவர் உங்களை அறிந்துமிருக்கிறார். அவரண்டை வாருங்கள், உங்களை கரம்பிடித்து பரிசுத்தத்தை நோக்கி அழைத்துச் செல்வார். பரலோகத்தையும் அளித்திடுவார். நீங்கள் யாவரும் பரலோக பாக்கியத்தை அடைந்திட தேவன் தாமே உதவி செய்வராக ஆமென்!

**J. பிக்கின்ஸ்**

# தோற்றத்தில் குள்ளமான விசுவாசத்தில் உயரமான...



**சி**று பிள்ளைகளே, இம் மாதமும் உங்களை சந்திப்பதிலே மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன். மாதந்தோறும் உங்களுக்கு நல்ல பாடங்கள் கிடைக்கும் என நம்புகிறேன். சரி, இம்மாதம் நம் எல்லோருக்கும் பிரபலமான ஒரு நபரை பற்றி ஒரு வித்தியா சமான கோணத்தில் பார்க்கலாம். யார் அந்த நபர் என்று அறிய ஆவலாக உள்ளதா?

வாசியுங்கள், லூக் 19 : 1-9 வரை. வாசித்து விட்டீர்களா? யார் அந்த மனிதன் என்று அறிந்து கொண்டீர்களா? ஆம், சகேயுவை தான். சரி,அவரிடம் இருந்து சில பாடங்களை நாம் கற்றுக் கொள்ளலாம்.

சகேயு எப்படிப்பட்டவன் என்று வேதாகமம் நமக்கு கூறுகிறது? 2-ம் வசனத்தில், அவன் ஆயக் காரருக்குத் தலைவனும், ஐசுவரிய வானுமாயிருந்த ஒரு மனுஷன் எனக் கூறுகிறது. சரி, இப்பொழுது அவன் என்ன செய்தான் என்று பார்க்கலாமா? வாருங்கள் நாம் சேர்ந்து பார்க்கலாம்.

இயேசுக்கிறிஸ்து எரிகோ-வுக்குள் பிரவேசிப்பதற்கு சற்று முன்னே ஒரு குருடனை பார்வையடையச் செய்து ஜனங்களை ஆச்சரியப்படவைத்து, தேவனை அவர்கள் புகழும் வண்ணம் ஓர் அற்புதத்தை செய்தார். அதற்கு பின்பு, அவர் எரிகோ வழியாக நடந்து போனார். ஜனங்கள் திரளாக அவரைக் காணும்படி கூடினார்கள். அப்பொழுது சகேயு என்பவன் 'மிகவும் குள்ளமாக இருந்த படியினாலே ஜனக் கூட்டத்தின் மத்தியில் இயேசுவை காண முடியவில்லை. ஆனால் அவனுக்குள்ளாக இருந்த எண்ணம் என்ன என்று நாம் பார்த்தால், 3-ம் வசனத்தில் "இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகை தேடினான்" என்று கூறுகிறது. 4-ம் வசனத்தில் அவனுடைய எண்ணம் நிறைவேற அவன் என்ன செய்தான் தெரியுமா? இயேசு போகும் வழியில் முன்னாக ஓடிப்போய் ஒரு காட்டத்தி மரத்தில் ஏறிக்கொண்டான்.

இயேசு அவ்விடத்தில் வந்த போது அவனை அண்ணாந்து பார்த்து, "**சகேயுவே, சீக்கிரம் இறங்கி வா**" நான் இன்றைக்கு உன்

வீட்டிலே தங்க வேண்டும் என்றார். அவனும் அதைக்கேட்டு சந்தோஷத்தோடே இறங்கி வந்து அவரை அழைத்துக் கொண்டு போனான் என்று வேதம் நமக்குக் கூறுகிறது (வச 4 - 6)

மேலும் தொடர்ந்து (வச 6 - 10) ஆகிய வசனங்களைப் பார்த்தால் அவன் என்னென்ன காரியங்களை செய்தான் என்று வேதம் நமக்கு தெளிவுபடுத்துகிறது.

சரி, இதிலிருந்து நாம கற்கக் கூடிய பாடங்கள் என்ன?

**முதலாவதாக,** இயேசுவைக் காண கூடிய வாஞ்சை அவனுக்குள் இருந்தது. ஒரு வேளை அவர் செய்த அற்புதங்களை அவன் கேள்விப் பட்டிருக்கலாம். எனவே தான் அவர் "எப்படிப் பட்டவரோ" என்று காண வகை தேடினான். அவன் மிகுந்த ஐசுவரியவானாக இருந்தாலும், ஓர் உயர் பதவியில் இருந்தாலும் இயேசுவைக் காண வேண்டும் என்ற **வாஞ்சை அவனுக்கு இருந்தது.**

**இரண்டாவதாக,** அவனுடைய இயலாமையிலும் அவரைக் காண வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அதற்கான வழிகளை தானே செய்தான் என்ன செய்தான் தெரியுமா? முன்னே கூறினது போல, இயேசு செல்லும் வழியில் முன்னாக போய் காட்டாத்தி மரத்தில் ஏறினான் இயேசுவைக் காண **தன்னை அவன் ஆயத்தப்படுத்தினான்.**

**மூன்றாவதாக,** இயேசு அவனை நோக்கி, நான் உன் வீட்டில் தங்கவேண்டும் என்று சொன்னதைக் கேட்டு "சீக்கிரமாய்" கீழே இறங்கி வந்து "சந்தோஷமாய்" அவரை அழைத்துக் கொண்டு போனான். அவர்கள் வீட்டிற்கு சென்றபோது அங்கேயும் சில காரியங்களைச் செய்தான். இந்த காரியங்களின் பலனாக அவன் என்ன ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டான் தெரியுமா? (வாசியுங்கள் 9ம் வச) இயேசு அவனை நோக்கி "**இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது**" எனக் கூறினார். எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். அந்நாளில், அநேக ஜனங்களுக்கு மத்தியில் அவன் ஒருவனுக்கு மட்டுமே இது கிடைத்தது. எதினால் தெரியுமா? அவன் செய்த காரியங்களுக்காக, நாமும் கூட நம்முடைய வாழ்வில், இச்சிறுவயதிலிருந்து சகேயுவைப் போன்று நம் இயேசுவைக் காண வாஞ்சையுள்ளவர்களாய், நம்முடைய வாழ்வில் வரும் ஈவுகளை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு தேவனுக்கும் அவருடைய குமாரனுக்கும் பிரியமாக நடக்க முற்படுவோம். தேவன் நம்முடைய செயலுக்குத் தக்கதான பலனையும் ஆசீர்வாதங்களையும் கிருபைகளையும் நமக்குத் தருவார். நாமும் சகேயுவைப் போல ஆத்துமாவிலும், சரீரத்திலும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். தேவன் உங்களை ஆசிர்வதிப்பாராக.

மனன வசனம் : மத் 6 : 33

**ABEL. R. NAYAGAM**

# பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்

*(எபே. 4 : 30)*

கடந்த மாத இதழில், நானும் நீங்களும் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தக் கூடிய ஒரு வழி என்னவென்று பார்த்தோம். அது, நாம் கிறிஸ்தவர்களாக இருக்கும்போது நமது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவும், வளரவும் முன்னேற்றமடையவும் தவறும் பட்சத்தில் அப்படியாகும் என்பது. கடந்த மாதம் நாம் படித்த எபே. 4 : 20 ல் தேவன் பழைய மனிதனைக் களைந்து போட்டு, புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளுதல் சம்பந்தமாக விவரிக்கிறார்.

ஒரு மனிதன் பாவமன்னிப்புக்கென்றும் புதிய ஆவிக்குரிய வாழ்க்கைக்கென்றும் கிறிஸ்துவுக்குள்ளாக்கப்படும்படியாகவும் தண்ணீருக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படும் பொழுது அது தொடங்குகிறது என்று பார்த்தோம்.

அது மாத்திரமல்ல, ஞானஸ்நானத்திற்கு பிறகு, நானும் நீங்களும் வளர்ந்து மேலோங்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார் என்று கற்றுக் கொண்டோம். புதிய ஏற்பாட்டிலுள்ள, இயேசுக் கிறிஸ்துவினுடைய வல்லமையுள்ள வார்த்தைகளின்படி, நம்முடைய மனதைப் புதிதாக்குவதின் மூலம் நாம் அப்படிச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். கர்த்தருடைய கிருபையிலும், அறிவிலும் நாம் வளராமலும் நம்முடைய மனதை புதிதாக்காமலும் இருந்தால், நாம் தேவனை துக்கப்படுத்துகிறோம்.

அடுத்து தயவு செய்து எபே. 4 : 20, 21 ஐ வாசியுங்கள் இங்கே, அப்படி முழுமையாக மாற்றம் பெறுவதற்கான முக்கிய காரியம், கிறிஸ்துவைக் கற்றுக் கொள்வதால் வருகிறதென்று காண்கிறோம். இதன் பொருள், கிறிஸ்து யார் என்று வெறுமனே தெரிந்துகொள்வதல்ல, அது முக்கியமானதுதான், ஆனால் போதுமானதல்ல!

நானும் நீங்களும் கிறிஸ்துவை முற்றிலும் அறிந்து கொள்ள வேண்டும். நாம் அப்படிச் செய்வதற்கு அவருக்குச் "செவிகொடுக்க" வேண்டும். ஆனால் இன்றைக்கு புதிய ஏற்பாட்டிலுள்ள தம்முடைய வார்த்தைகளின் மூலமாகத்தான் பேசுகிறார். (எபி. 1 : 1, 2) ஆகையால், புதிய ஏற்பாட்டிலே அவர் என்ன சொல்லுகிறார் என்று ஜாக்கிரதையாய்ப் படிக்க வேண்டும்.

அத்தோடு நானும் நீங்களும் "அவராலே போதிக்கப்படுவதற்கு" நம்மை அனுமதிக்க வேண்டும். அவருடைய வார்த்தைகளில் நிலைத்திருப்பதன் மூலமும், வாழ்வதன் மூலமும் நாம் அப்படிச் செய்கிறோம். இது நாம் அவருடைய உண்மைச் சீடர்கள் என்று காட்டுகிறது. (யோவா. 8 : 31) நாம் அவருடைய வசனத்தின்படி வாழ்ந்தால், சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று வாக்களித்துள்ளார் (யோவா. 8 : 32) அவருடைய வார்த்தைகளின்படி வாழ்வதற்கு, அவருடைய வார்த்தைகளை நானும், நீங்களும் இரவும், பகலும் தியானிக்கிறவர்களாயிருக்க வேண்டும். ( சங். 1 : 2; 119 : 97)

இன்னும், அவருடைய வசனங்களை, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் செய்ல்படுத்துவதன் மூலம், அவைகள் நம்முடைய இருதயங்களில் எழுதப்படுவதற்கு நம்மை அனுமதிக்க வேண்டும். அந்த வசனங்கள், உங்களுடைய ஆத்துமாக்களையும், என்னுடைய ஆத்துமாவையும் இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறதென்று இயேசுவானவர் வாக்களித்துள்ளார் (யாக். 1 : 25)

இப்படிச் செய்வதன் மூலம், கிறிஸ்துவின் சிந்தையை பெற்றுக் கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும் (பிலி. 2 : 5) அதாவது, நாம் நமது இரட்சகரைப் போலவே சிந்திக்கவும், அவரைப் போன்ற மனநிலையைப் பெற்றுக் கொள்ளவும் ஊக்கமாசப் பிரயாசை எடுக்க வேண்டும்! நம்முடைய நோக்கம், அவரை நம்மில் உருவாக்குவதே (கலா. 4 : 19) அவர் நம்மில் வாழ்வதை மற்றவர்கள் காண நாம் விரும்புகிறோம். (கலா. 2 : 20) நம்முடைய வாழ்வின் மூலமாகவும், மரணத்தின் மூலமாகவும் அவரை மகிமைப்படுத்த விரும்புகிறோம். (பிலி. 1 : 20)

நானும், நீங்களும், நம்மை ஆவியில் வளர்த்துக் கொள்வதற்கு இந்தவிதமாக முயற்சித்து, இயேசுவைப் போல மாறுவோமானால் தேவன் நம்மில் பிரியப்படுவார். இப்படிச் செய்ய மறுப்போமானால் தேவனுடைய பரிசுத்த ஆவியை நாம் துக்கப்படுத்துகிறோம்! நாம், ஏற்கனவே படித்தது போல, தேவனுடைய ஆவியைத் துக்கப்படுத்துவதின் முடிவு அழிவுள்ளதாகவும், அந்த அழிவு நித்தியமானதாகவும் இருக்கும்.

அடுத்து, தயவு செய்து எபே. 4 : 25 வாசியுங்கள் நாம் பொய் சொல்லும்போது தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுததுகிறோம். எனக்கு அருமையான சகோதரர்களே, நண்பர்களே, இதைக்குறித்து நீங்கள் ஆழமாக யோசித்துப் பாருங்கள்! உங்கள் மனதில் ஆழமாக இது பதிவாகட்டும் நானும், நீங்களும் பொய் பேசுகிறபொழுதெல்லாம் தேவனைத் துக்கப்படுத்துகிறோம்.

நீதி. 6 : 17 ன் படி தேவன் வெறுக்கின்ற காரியங்களில் பொய் நாவும் ஒன்று. அது வேதனுக்கு அருவருப்பானது!.

யோவா. 8 : 44 ல் தன்னை சுற்றிலுமிருந்து சில மனிதர்களிடம், உங்கள் பிதாவானவன் பிசாசு என்று சொன்னார். அன்றைக்கு இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடத்தில் இந்த வார்த்தைகள் எப்படி ஊடுருவியிருக்குமென்று கற்பனை செய்து பாருங்கள்.

பிசாசனவனை, இயேசு அங்கு தொடர்ந்து விவரிக்கிறார். நம்முடைய ஆசீர்வாதத்தின் இரட்சகர், அவன் ஆதிமுதல் கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான் என்று சொன்னார். நானும் நீங்களும் பொய் சொல்லத் தீர்மானிப்போமானால் நாம் நம்முடைய பிதா பிசாசு என்று சொல்லுகிறவர்களாயிருப்போம். நாம், தேவனுடைய புத்திரராக அல்ல. பிசாசின் புத்திரராக வாழ்கிறவர்களாயிருப்போம்.

கொலே. 3 : 19 ல் பழைய மனுஷனையும், அவனுடைய செய்கைகளையும் நாம் களைந்து போட்டபடியால், நாம் ஒவ்வொருவருக்கொருவர் பொய் சொல்லாமலிருக்கும்படி தேவன் நமக்கு கட்டளையிடுகிறார். அதாவது, நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தில், பழைய மனிதனைச் சிலுவையிலறைந்து கர்த்தருக்குள் கீழ்ப்படிந்த போது, இந்தப் பாவ பழக்கம் பின்பாக தள்ளப்பட்டிருக்க வேண்டும்.

மனிதர்களாகிய நாம் பொய் சொல்வதைப் பற்றி குறைத்து மதிப்பிடும் குணமுடையவர்களாயிருக்கிறோம். பொய் சொல்வது, மற்ற பாவங்களைப் போல ஒரு பெரிய காரியமல்லவென்று நம்மை நாமே திருப்தி செய்து கொள்கிறோம்.

ஆனால், அருமையானவர்களே, தயவு செய்து வெளி : 21 : 8 ஐ வாசியுங்கள். தேவன் அங்கே அவிசுவாசம், அருவருப்பானவை. கொலை, விபச்சாரம் என்று சில பயங்கரமான பாவங்களைப் பட்டியலிடுகிறார். நாம் அப்படிப்பட்ட பாவங்களைச் செய்து மனந்திரும்பாமற்போனால் நாம் அக்கினையும் கந்தகமும் எரிகிற கடலிலே (நரகத்திலே) பங்கடைவோம். இன்னொருபாவம் நம்மை அங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும். அது பொய் சொல்லுதல்.

மனிதர்களாகிய நாம், ஒருவரிடம் தவறாக ஒன்றைச் சொல்லிவிட்டால், அதுதான் பொய் என்று பொதுவாக நினைக்கிறோம். இருப்பினும், அது ஒரு ஆவிக்குரிய சிந்தையல்ல! இங்கே ஆபிரகாம் பற்றி எண்ணிப்பாருங்கள்.

ஆதி 12 : 11-20 ல் ஆபிராமும், சாராயும் எகிப்துக்குப் போனார்கள் என்று வாசிக்கிறோம். பயத்தினாலே சாராய் தன்னுடைய சகோதரி என்று ஆபிராம் பார்வோனிடம் பொய் சொன்னான். ஆபிராம், பார்வோனிடம் இவள் என் மனைவி என்று சொல்லவில்லை. சாராய்/ ஆபிராமின் மனைவி என்று பார்வோன் கண்டபோது முற்பிதாக்களில் ஒருவானகிய ஆபிராமை, என்னை ஏன் வஞ்சித்தாய் என்று கடிந்து கொண்டான்.

ஆதி. 20 : 1 - 18 ல் கேராரின் ராஜாவாகிய அபிமலேக்கிடத்தில் ஆபிரகாம் அதேவிதமான வஞ்சனையில் ஈடுபட்டான் வசனம் 9 ல் புறஜாதி ராஜா ஆபிராகாமை வஞ்சனைக்காகக் கடிந்து கொண்டான்.

வெளி 20 : 12 ன் படியாக ஒருவகையில் சாராய் ஆபிரகாமுக்கு சகோதரிதான். ஆபிரகாமின் தகப்பனுக்கு குமாரத்தி, ஆனால் ஆபிரகாமின் தாய்க்குக் குமாரத்தி அல்ல.

ஆகையால், பார்வோனிடத்திலும் அபிமலேக்கினிடத்திலும் ஆபிரகாம் என்ன சொன்னானோ அது பாதி உண்மைதான். அப்படியானால் ஆபிரகாம் என்ன தவறு செய்தான்? ஆபிரகாம் சொன்னது, ஒரு வகையில் உண்மையாக இருந்தாலும் பார்வோனையும், அந்த ராஜாவையும் வஞ்சிக்க எண்ணியபடியால் அது பாவமானது, பொய்யாயிற்று.

இப்படிப்பட்ட பொய்களைச் சொல்லுவது தேவனை துக்கப்படுதக்கூடியது. எனக்கும், உங்களுக்கும் இது நித்திய விளைவை ஏற்படுத்தும்.

இதற்கு மாறாக, நானும் நீங்களும் உண்மையைப் பேசுவோமானால் தேவனை பிரியப்படுத்துவோம். அதைத்தான் எபே. 4 : 25 ல் நாம் ஒவ்வொருவரும் செய்யும்படியாகக் கட்டளையிடுகிறார்.

நீதி. 12 : 17 ல் சத்தியவாசகன் நீதியை வெளிப்படுத்துவான் என்று பார்க்கிறோம். எபே. 4 : 15 ல் நாம் அன்போடு, சத்தியத்தைப் பேசவேண்டுமென்று நமக்கு கட்டளை கொடுக்கிறார். இயேசுவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். (யோவா. 14 : 6) தேவனுடைய வார்த்தைகள் சத்தியமாயிருக்கிறது (யோ. 17 : 17)

**EZSR** **CHARLIE DI PALMA**

## II. தெசலோனிக்கேயர் ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : முதலாம் நிருபம் எழுதிய காலத்திலிருந்து (கி.பி. 51 - 52) ஒரு சில மாதங்களுக்குள் எழுதப்பட்டு இருக்கலாம்.

### இந்நூல் மற்றும் பட்டணம் பற்றி

1. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய சில தவறான போதனைகளை கண்டித்து உணர்த்தும்படியாக இது எழுதப்பட்டது (2 தெச 2 : 1, 2 ; 3 : 6 - 12)
2. தெசலோனிக்கேய சபையார் மிகுந்த துன்பத்தின் பாதையில் நடந்திருக்கிறார்கள் (2 தெச. 1 : 5-10)
3. கேஸ்சண்டர் **(Cassander),** இவர் மகா அலக்சாண்டரின் ஒன்றுவிட்ட சகோதரியை திருமணம் புரிந்தவர், இப்பட்டணத்தை 315 கி.மு. கட்டி அதற்கு தன் மனைவியின் பெயரைச் சூட்டினார்.
4. 168 கி.மு.வில் ரோமர்கள் அதை தங்கள் வசப்படுத்தி, மக்கெதோனியாவின் தலைநகராக மாற்றினர்.
5. இந்நிருபத்தை, கொரிந்து பட்டணத்திலிருந்து பவுல் எழுதியிருக்கலாம் என நம்பப்படுகிறது.
6. சிலர் கர்த்தருடைய வருகை உடனே வரும் என நம்பி தங்கள் அலுவல்களை விட்டு, மற்றவர்களுடைய தயவில் வாழந்திருக்கிறார்கள் (II. தெச.3 : 6 - 12)

### இந்நூலின் செய்தி

1. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்கள் இழந்து போனவர்கள் (II. தெசலோ. 1 : 7 - 9)
2. வேலை செய்வது ஆசீர்வாதமானது, அது தேவனால் கட்டளையிடபட்டுள்ளது (ஆதி. 2 : 15, 2 தெச 3 : 8 - 12)
3. சபையில் ஒழுக்கம் நிச்சயம் கடைபிடிக்கப்பட வேண்டும். (II. தெச 3 : 6, 12 - 15)
4. கேட்டின் மகன் வெளிப்பட்டு, வழி விலகல் நடக்கும் என இப்புத்தகம் தீர்க்கதரிசனம் சொல்லுகிறது (II. தெச. 2-12). இது ஏற்கனவே நடந்தாயிற்று.

# "நாம் தேவனால் வரும் மகிமையைத் தேட வேண்டும்"

பொதுவாக மனிதர்களின் இயற்கை சுபாவங்களில் ஒன்றுதான் எப்பொழுதும் மற்றவர்களால் மகிமைப்படவேண்டும் என்பது அல்லது ஒருவரை ஒருவர் மகிமைப்படுத்திக் கொள்வது, மற்றவர்களால் வரும் மேன்மைக்கும், புகழ்ச்சி, பாராட்டுக்கள் போன்றவற்றிற்காக பெரிதும் எதிர்ப்பார்த்து அதற்காக பிரயாசப்படுவார்கள். ஆனால், அதைக் குறித்து நம் ஆண்டவர் இயேசு குறிப்பிடும்போது "தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக் கொள்கிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்"? என்று கேள்வி எழுப்புகிறார். (யோவான் 5 : 44) காரணம் நம் இயேசுவானவர், மனுஷர்களால் வரும் மகிமையை ஏற்றுக் கொள்கிறதில்லை (யோவான். 5:41) மேலும் அவர் மனுஷருக்குள் மகிமையாக எண்ணப்படுவது, தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது என்றும் சொல்லுகிறார். பரிசுத்த வேதாகமத்தில், மனிதர்களால் மகிமையை ஏற்ற ஒரு ராஜாவுக்கு நிகழ்ந்த பயங்கரமான சம்பவத்தை குறித்து (அப்போஸ்தலர் நடபடிகள் 12 : 22, 23) ஆகிய வசனங்களில் நம்மால் பார்க்க முடிகின்றது. இதிலிருந்து மனித மேன்மை எவ்வளவு ஆபத்தானது என்று நம்மால் உணர முடிகிறது. நிரந்தரமில்லாத இந்த மனித மகிமையைத் தேடாமல் என்றும் நித்தியமான தேவனால் வரும் மகிமையை தேடவேண்டும் என்பதில் நாம் கருத்தாய் இருக்க வேண்டும்.

நம் எல்லோருடைய இருதயத்தின் நினைவுகளை ஆராய்ந்து கண்டுகொள்ளும் நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களில், வாழ்ந்து கொண்டிருந்த மனிதர்கள் சிலரின் நல்ல குணாதிசயத்தை அவர்களின் விசுவாசத்தையும் கவனித்து நம் ஆண்டவர் இயேசு அவர்களை மகிமைப்படுத்தியிருக்கிறார். குறிப்பாக ஒரு ஸ்திரியைப் பார்த்து இயேசு இவ்விதமாக கூறுகின்றார். ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது, நீ விரும்புகிற படி உனக்கு ஆக்கடவது" என்றார் (மத்தேயு 15 : 28).

மற்றொரு முறை தூரத்திலிருந்து நாத்தான் வேலை பார்த்த இயேசு அவனைக் குறித்து குறிப்பிடும் போது, "இயேசு நாத்தாவேல் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக் குறித்து, இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்" (யோவான் 1 : 47). ஒருமுறை ஒரு நூற்றுக்கு அதிபதியை குறித்து இயேசு குறிப்பிடும்போது "இயேசு இவைகளைக் கேட்டு, அவனைக்

குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி, தமக்கு பின் செல்லுகின்ற திரளான ஜனங்களை நோக்கி, இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்" லூக்கா 7 : 9. இவ்விதமாக நம் ஆண்டவர் இயேசு அவர்களை மகிமைப்படுத்தியிருக்கிறார்.

நாம் பார்த்த இந்த மூவரும், இயேசுவானவரைப் பற்றி முழுமையாக தெரிந்து கொண்டவர்களல்ல. இருப்பினும் அவர்களை மகிமைப்படுத்தியிருக்கிறார் என்றால், அதைக் குறித்து நாம் நம்மனதில் சற்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக, இந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைக் குறித்து இயேசுவே ஆச்சரியப்பட்டதாகப் பார்க்கிறோம். நம் ஆண்டவர் இயேசுவை ஆச்சரியத்தில் ஆழ்த்திய இந்த நூற்றுக்கு அதிபதி, செய்த காரியத்தையும், காரணத்தையும் நாம் இப்போது பார்க்கப் போகிறோம். வேதாகமத்தில் லூக்காவின் சுவிசேஷம் ஏழாம் அதிகாரம் ஒன்று முதல் ஒன்பது வரையிலுள்ள வசனங்களின் மூலம் நாம் ஆராய்ந்து தெரிந்துக் கொள்கிறோம்.

### I. நூற்றுக்கு அதிபதியின் அன்பு :

பெரும்பாலும் அன்றைய நாட்களில் வேலைக்காரர்களாக இருப்பவர்களை அடிமைகளைப் போல நடத்தப்படுவது வழக்கம். ஒரு பொருளை விற்கிறதைப் போல, அவர்களை மற்றவர்களுக்கு விற்பதும், அவர்களை அடித்துத் துன்புறுத்தி கொலை செய்தாலும் கேட்பதற்க்கில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கூட, இந்த நூற்றுக்கு அதிபதி தன்னுடைய வேலைக்காரன் நோய்வாய்ப்பட்டு மரண போராட்டத்தில் இருக்கும்பொழுது அவன் மீது மிகுந்த அன்பும், அக்கறையும் கொண்டவனாய், இந்த நூற்றுக்கு அதிபதி அவனுக்காக இயேசுவிடம் குணமாக்குமாறு வேண்டிக் கொள்கிறான். (மத்தேயு 8 : 5-6) இன்றைய நாட்களிலும் நாம் அநேகருடைய வீடுகளில் வேலைக்காரர்கள் இருப்பதை பார்த்திருக்கிறோம். ஒருவேளை அந்த வேலைக்காரனுக்கு இது போன்ற நிலைமை ஏற்பட்டால், அவன் எஜமான் மருத்துவர்களிடம் சென்று தன் வேலைக்காரனை குணமாக்கும்படி வேண்டிக் கொள்வார்களா? என்றால், அதற்கு நிச்சயமாக நம்மால் பதில் கூறமுடியாது. ஒருவேளை தன்னுடைய சொந்தக் குடும்பத்தில் தன் மனைவிக்கோ, அல்லது தன் மகனுக்கோ, மகளுக்கோ இதுபோன்ற வியாதி ஏற்பட்டால் அப்பொழுது வேண்டுமானால் கட்டாயம் வேண்டிக் கொள்வார்கள். இதை நாம் உறுதியாகச் சொல்ல முடியும். இங்கே நூற்றுக்கு அதிபதி சாதாரண வேலைக்காரன் என்று பாராமல் தன் பிரியமான ஒருவனாக எண்ணி அவனுக்காக வேண்டுகிறான் என்றால், அது அவனுக்குள் இருக்கும்

தூய்மையான அன்பை வெளிப்படுத்தி காட்டுகிறது. நாமும் இதுபோன்ற அன்பைக் கொண்டவர்களாயிருந்தால் நிச்சயம் நாம் தேவனால் மகிமைப்பட முடியும்.

“இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரிது”. 1 கொரி 13 : 13.

## II. நூற்றுக்கு அதிபதி நற்கிரியை செய்கிறவனாக இருக்கிறான் :

இயேசுவிடம் வேண்டிக் கொள்ளும்படி அனுப்பப்பட்ட யூதர்களுடைய மூப்பர் “அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக் கொண்டு, நீர் இந்த தயவு செய்கிறதற்கு அவன் (நூற்று அதிபதி) பாத்திரனாயிருக்கிறான். அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்றார்கள்” (லூக்கா 7 : 4 – 5). இங்கே நூற்றுக்கு அதிபதியைக் குறித்து இரண்டு விதமான கருத்துக்களை சொல்லுவதை பார்க்கிறோம். யூதர்களை நேசித்து, ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்றும் சொல்லப்படுகிறது. இந்த நூற்றுக்கு அதிபதி ரோம அரசாங்கத்திற்கு உட்பட்டவன். இயேசுவின் உபதேசங்களை எதிர்க்கக் கூடிய ஒரு ரோம பிரஜையாக இருந்தாலும் ரோம சட்ட திட்டங்களுக்கு அவன் அப்பாற்பட்டவனாக இருந்து யூதர்களை நேசித்து ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டிக் கொடுத்துள்ளான் என்றால் இது அவனுடைய நற்கிரிகளை வெளிப்படுத்திக் காட்டுகிறது. “நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது, அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே” (நீதி 3 : 27) என்பதை இது நினைவுப்படுத்துகிறது.

“ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்” யாக் 4 : 17.

## III நூற்றுக்கு அதிபதி தன்னைத்தான் தாழ்த்திக் கொள்கிறான்.

ஆண்டவரே, நீர் வருத்தப்பட வேண்டாம். நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை. லூக்கா. 7 : 6 – 7.

யூதருடைய மூப்பர், இயேசுவிடம் சொல்லும் போது நீர் இந்த தயவு செய்கிறதற்கு அவன் (நூற்றுக்கு அதிபதி) பாத்திரன் என்றார்கள். ஆனால் இந்த நூற்றுக்கு அதிபதியோ இயேசுவிடம் கூறும்பொழுது, நான் பாத்திரன் அல்ல. பாத்திரனாக என்னை எண்ணிக் கொள்ளவில்லை என்று இயேசுவுக்கு முன் தன்னை முற்றிலுமாக தாழ்த்திக் கொள்கிறான். இன்றைய நாட்களில், ஒருவர் சபைக்காக ஏதேனும் ஒரு பொருளை பரிசாக

தந்தால் அதை சபை மக்கள் யாவரும் தெரிந்துக் கொள்ளும் வகையில் அப்பொருளின் மீது அவருடைய பெயர் பொறிக்கப்பட்டிருக்கும் என்பதை நாம் அநேக இடங்களில் பார்த்து இருக்கிறோம். ஆனால், ஒரு ஜெப ஆலயத்தை கட்டிக் கொடுத்த இந்த நூற்றுக்கு அதிபதி கிறிஸ்துவுக்காக தான் செய்தது ஒன்றுமில்லை என்று தன்னைத் தாழ்த்துகிறேன்.

"தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவன், தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்".

## IV. நூற்றுக்கு அதிபதி இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டவனாக இருக்கிறான்.

"ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" (லூக்கா 7 : 7).

ஒரு சாதாரணமான மனிதனாகிய நான், ஒருவனைப் போ என்றால் போகிறான். மற்றொருவனை வா என்றால் வருகிறான். இப்படி அதிகாரம் கொண்டிருந்தாலும், அவன் இயேசுவின் அதிகாரத்தில் நம்பிக்கை கொண்டிருந்தான். இயேசுவோடு மூன்றை ஆண்டுகள் (31/2) சுற்றி திரித்து அவர் செய்த அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் நேரில் கண்ட சீடர்களே, இயேசு நான் மரித்து மூன்றாம் நாளில் மீண்டும் உயிர்த்தெழுவேன் என்று சொல்லியும், இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை இல்லாதவர்களாய், இயேசு அவர்களுக்கு தரிசனம் ஆனபோது அவர்கள் ஆவி என்று பயந்தார்கள். மேலும் அவர்கள் இயேசுவை சந்தேகித்தனர். (லூக்கா 24 : 37) அவர்களின் ஒருவன் இயேசுவை தொட்டு பார்க்கும் வரையில் அவரை விசுவாசியாமல் இருந்தான். இயேசுவோடு கூட இருந்தவர்களே அற்பவிசுவாசிகளாக இருந்தார்கள். ஆனால் இந்த நூற்றுக்கு அதிபதியோ இயேசுவின் வார்த்தைக்கு வல்லமை இருக்கும் என்று நம்பிக்கையோடு விசுவாசிக்கிறவனாக இருக்கிறான்.

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும். (யோவான் 15 : 7).

## V. இறுதியாக நூற்றுக்கு அதிபதி அதிகாரத்திற்கு கீழ்ப்படிபவனாக இருக்கிறான்.


சாதாரணமாக அதிகாரம் கையில் இருப்பவர்கள் மற்றவர்கள் தமக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றும், நான் சொன்னதுதான் நடக்க வேண்டும் என்றும் நினைப்பார்களே தவிர, அதற்கு கீழ்ப்படிந்து நடப்பது என்பது கூடாத காரியம். ஆனால் இந்த நூற்றுக்கு அதிபதி அதிகாரம்

பெற்றவனாக இருந்தும் அதிகாரத்திற்கு கீழ்ப்படிகிறவனாக இருக்கிறான். பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே சுமார் 127 நாடுகளுக்கு ராஜாவாக இருந்த அகாஸ்வேரு (எஸ்தர் 1 : 1) தன்னிடம் உள்ள சகல பிரபுகளுக்கும் மேலாக ஆமான் என்பவனை உயர்த்தி சகல அதிகாரமும் கொடுத்திருந்தார். ஆதலால், ராஜாவின் அரண்மனைகளில் உள்ளவர்கள் எல்லோரும் ஆமானை வணங்கிக் கொண்டு வந்தார்கள். மொர்தெக்காய் ஒருவன் மட்டும் அவனை வணங்காமல் இருந்தான். இதனால் ஆத்திரம் அடைந்த ஆமான், தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி மொர்தெக்காய் மட்டும் அல்ல அவரது இனத்தார் எல்லோரையும் கொலை செய்ய திட்டமிடுகிறான். தான் தோண்டி குழியிலேயே தானோ விழுவான் என்ற பழமொழிக்கு ஏற்ப மொர்தெக்காயுவை கொலை செய்யத் தயார் செய்யப்பட்ட தூக்கு மரத்தில் ஆமானையே தூக்கில் போட ராஜா உத்திரவு இடுகிறார். ஒருவனுக்கு தண்டனை வழங்குவது ராஜாவின் வேளை, ஆனால் இந்த ஆமானோ எனக்கும் மேலாக ஒருவர் இருக்கிறார் என்று சற்றும் சிந்திக்காமல் தன்னுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல், அதை துஷ்பிரயோகம் செய்தான். இறுதியில் அவனுடைய உயிருக்கு அவனே ஆபத்தை வரவழைத்துக் கொண்டான். (எஸ்தர். 7 : 10) இன்று இப்பூமியிலே நமக்கும் ஏதேனும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால், நமக்கும் மேல் ஒரு அதிகாரி இருக்கிறது என்று கருதி அதற்குக் கீழ்ப்படியக் கடவோம்.

"எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிய கடவன், ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது" (ரோமர் 13 : 1)

தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொண்டு நியாயப்பிரமாணத்தைக் கடைபிடித்து வந்த இஸ்ரவேல் மக்கள் நம் ஆண்டவர் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசியாமலும், அவரிடம் அன்பு கூறாமலும், அவருடைய வார்த்தையை நம்பாமலும் அவரையே சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார்கள். ஆனால் ஒரு புறஜாதியாக இருந்த இந்த நூற்றுக்கு அதிபதி இவை எல்லாவற்றையும் நம்பி விசுவாசித்தபடியினால், நம் ஆண்டவர் அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் காணவில்லை என்று அவனைக் குறித்து மேன்மைப் பாராட்டுகிறார். ஆம் பிரியமானவர்களே, கிறிஸ்தவர்கள் என்று பெருமையாக சொல்லிக் கொள்ளும் நாம் இப்படிப்பட்ட தகுதிகளை நம்மடைய வாழ்க்கையில் பெற்றிருந்தோமானால் நிச்சயம் நாமும் தேவனால் மகிமைப்படமுடியும். தேவன் தாமே நம்மை அவ்விதமாக ஆசீர்வதிப்பாராக ஆமென்.


**ஒய்.வி. பிரசாத்**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box 80<br>Kakinada - 533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box 8405<br>Bangalore - 560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annual Subscription Rs. 30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த
வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by **Church of Christ, Kangayam**
Printed at Konar Printers, Madurai - 625 012. **Editor : S. Rajanayagam**

DESIGNED BY SAHURAA ERODE © 22540094